<u>பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்</u>

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், இயக்குநர், சென்னை–6 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை: மரு.எஸ்.குருநாதன், எம்எஸ்., (ஜிஎஸ்),

<u>ந.க.எண்.8105/நிபி8/1/2021–2</u>

நாள்: 25.08.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் - திரு.சு.கண்ணன், (த/பெ.(அமரர்) திரு.சுந்தரம், மருத்துவமனை பணியாளர், அரசு மருத்துவமனை, கோட்டூர், கோவை மாவட்டம்) – கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியமர்த்தப்பட்டது - பணி வரன்முறை – ஆணை வழங்குதல் - தொடர்பாக

பார்வை:
1) அரசாணை (நிலை) எண்.560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2) அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
3) அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.
4) அரசாணை (நிலை) எண்.202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.10.2007.
5) இவ்வியக்கக கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் பணிநியமன ஆணை ந.க.எண்.56448/நிபி8/1/2019, நாள் : 23.09.2019.
6) இவ்வலுவலக பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.59252/நிபி2/2/2019, நாள் 30.09.2019.
7) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் : 26.02.2021.
8) அரசு கடித எண்.8755/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏடி2) துறை, நாள் : 16.03.2021.
9) கோவை மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் கடித ந.க.எண்.599/நிபி2/2/2021, நாள் : 03.02.2021.

*****

<u>ஆணை:</u>

பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016)–ன்படி, கோவை மாவட்டம், கோட்டூர், அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணியாளராகப் பணிபுரிந்து பணியிடையே 09.06.2004 அன்று இயற்கையெய்திய திரு.க.சுந்தரம் மகனும் வாரிசுதாரருமாகிய திரு.சு.கண்ணன் (பிறந்த தேதி 15.06.1971) தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் கருணையடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500–62000/– நிலை 8 (Level 8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கோவை மாவட்டம், கோட்டூர், அரசு மருத்துவமனையில் மருத்துவமனைப் பணியாளராகப் பணிபுரிந்த திரு.க.சுந்தரம் என்பவர் 16.01.1967 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 16.01.1968 தகுதிகாண்பருவம் முடித்துள்ளார். அவரின் பிறந்த தேதி 17.09.1945, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.09.2005 ஆகும். இறந்த அரசு ஊழியரின்

மகன் திரு.சு.கண்ணன் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிவேண்டி உரிய காலக்கெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

திரு.சு.கண்ணன், என்பவரின் பிறந்த தேதி 15.06.1971 என்பதால் அரசு ஊழியர் இறந்த நாளான 09.06.2004 அன்று 32 வருடம் 11 மாதம் 25 நாட்கள் வயதினை பூர்த்தி செய்துள்ளார். திரு.சு.கண்ணன், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருந்ததாலும், கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததாலும், திரு.சு.கண்ணன் என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிக இளநிலை உதவியாளராக, கோவை மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு 04.10.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். இவரது பணியை 04.10.2019 முற்பகல் வரன்முறை செய்வதற்கான முன்மொழிவு கோவை மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள் அவர்களிடமிருந்து பார்வை 9–ல் காணும் கடிதத்தின்படி வரப்பெற்றுள்ளது.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.சு.கண்ணன் என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை பார்வை–7இல் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் இணைந்த நாளான 04.10.2019 முற்பகல் முதல் தனியர் அப்பணிக்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரின் தற்காலிக பணியினை, பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப்பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

எஸ்.குருநாதன்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
இயக்குநர்

பெறுநர்
திரு.சு.கண்ணன்,
இளநிலை உதவியாளர்,
நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகம், கோவை
–– நலப்பணிகள் இணை இயக்குநர், கோவை மூலமாக

நகல்
இணை இயக்குநர் நலப்பணிகள், கோவை.
நிர்வாகப் பிரிவு 2 (2 நகல்கள்)
நிர்வாகப் பிரிவு 2 (முதுநிலை)
இருப்புக் கோப்பு / உதிரி

// உண்மை நகல் // அனுப்பப்படுகிறது //

இணை இயக்குநர் (நிர்வாகம்)

26/8/21

26/8/21